DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.299/ 2020 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 1 |
| Name | : செந்தில் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2026.

--------

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கொங்கப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். உசிலம்பட்டி சந்தையில் பூக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். சாட்சி 1 ராகவனை தெரியும். அவர் உசிலம்பட்டியில் லோடுமேனாக வேலை பார்த்தார். அவருக்கு சொந்த ஊர் எது என்று தெரியாது. கடந்த 6, 7 வருடங்களாக அவர் எங்கு உள்ளார் என்று தெரியாது. உசிலம்பட்டியில் வேலை பார்க்கவில்லை. சாட்சி 2 அன்பழகனை தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் ராகவனை 108 ஆம்புலன்சில் அனுப்பி வைக்கவில்லை. ராகவனை 108 ஆம்புலன்சில் ஏற்றி செல்வதாக கூறினார்கள். ராகவனும், எதிரியும் சண்டை போட்டதாக கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை**

கடந்த 20.04.2019ம் தேதி உசிலம்பட்டி பூ மார்க்கெட்டில் நானும், அன்பழகன், ராகவன் ஆகியோர்கள் பேசிக்கொண்டிருந்தபோது ஆறுமுகம், ராகவனை பார்த்து மார்க்கெட்டிற்குள் வரக்கூடாது என சொல்லி அவரை இத்தோடு தொலைந்து போடா என்று இடுப்பில் வைத்திருந்த குவார்ட்டர் மது பாட்டிலால் ராகவனின் இடது பக்க

வயிற்றில் குத்தியதில் தோல் கிழிந்துவிட்டது என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.02.26 17:44:04 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**உசிலம்பட்டி.**